BTA
BERGEN TAMILSK AVIS
43
June 2025

# தேன்தமிழிதழ்

Org.nr: 926 840 320 - ISSN: 2703-8440 (Print ISSN: 2703-8785)



# வணக்கம்.



கோடைகால விடுமுறை அண்மித்துவிட்டது. ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகள் கோடைகாலத்தில் அதிகம் வருகை தருவது வழக்கம். அந்த வகையில் நோர்வே நாட்டுக்கும் சுற்றுலா பயணிகள் அதிகம் வருகை தந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த 2024ஆம் ஆண்டில் முன்னெப்போதும் கண்டிராதளவு பயணிகள் நோர்வேயின் இயற்கை வளங்களைக் காண வருகை தந்ததாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அதே வேளை 2025ம் ஆண்டில் இன்னும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்பும் நோர்வே மக்களிடம் உண்டு.

சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் வடக்கு நோர்வே (Nord Norge) மற்றும் மேற்கு நோர்வே (Vestlandet) போன்ற பகுதிகளுக்கு செல்வதுண்டு. இயற்கையை காண்பதற்கு மட்டுமல்ல, நாட்டின் கலை, கலாசாரம் மற்றும் வரலாற்றை அறிந்து கொள்வதற்காகவும் ஏராளமான பயணிகள் இங்கே வருகின்றனர்.

அதேவேளை, நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோ ஐரோப்பாவின் கலாசார நகராக விளங்கி வருகின்றது. எவ்வாறாயினும் நோர்வே நாட்டுக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான அடிப்படைக் காரணம் இந்நாட்டு அரசு சுற்றுப்புறச்சூழலில் அதிக கவனமெடுத்து, பாதுகாத்து வருகின்றதாகும். சுற்றுச்சூழலில் உள்ள வளங்களை பாதுகாப்பதற்கும் பெறுமதி மிக்கதாக மாற்றுவதற்கும் நாட்டின் அரசும், மக்களும் கடினமாக உழைத்து வருகின்றனர். கடலாலும், காடுகளாலும், மலைகளாலும் நீர்வீழ்சிகளாலும் சூழ்ந்திருக்கும் நோர்வேநாட்டின் இயற்கையை பாதுகாத்தல் இங்கு குடி புகுந்து வாழ்ந்து வரும் மக்களாகிய நமது கடமையும் ஆகும். சூழலை பாதுகாப்போம் சுகமாய் வாழ்வோம்.

உறவுகளே, கடந்த தேன் தமிழிதழ் தொடர்பாக எமது வாசகர்கள் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை எமக்குத் தந்தமைக்கு மிக்க நன்றிகள். உங்களது விமர்சனங்களும், கருத்துக்களும் எம்மை ஊக்குவிக்கும் என்பது உண்மை. தொடர்ந்து உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு தந்துதவும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

தேன் தமிழிதழ்
Ansvarlig redaktør: Julius Antoni
ஆசிரியர்: யூலியஸ் அன்ரனி
தொலைபேசி எண்: (47) 924 63 674

BTA
BERGEN TAMILSK AVIS

# இரண்டாம் அகிலப் போரில் நோர்வேஜிய வீராங்கனைகள்



Matros Lillian von Hanno ble under krigen utnevnt til leder av Marinens kvinnekorps. Hun og de andre kvinnene måtte lære seg å skyte med en Colt-pistol. Det skjedde om bord på jageren «Glaisdale», som ble operativ 12. juni 1942 under norsk kommando.
Foto: Riksarkivet/NTBs krigsarkiv



நோர்வே இரண்டாம் உலகப்போரிலிருந்து விடுதலையாகி 80வது ஆண்டினை இவ்வாண்டு தொட்டு நிற்கிறது. கடந்த இதழில் நோர்வையின் சுதந்திரத்திற்காக களத்தில் நின்று போராடிய போர் வீரனான ஷெட்லாண்ட் லார்சன் பற்றிய தகவல்களை, வரலாற்றுக் குறிப்புகளைப் பார்த்தோம்.
அவர்போன்ற ஏராளமான போர்வீரர்கள் இந்நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்களது தியாகத்துக்கான மதிப்பும், மரியாதையும், நோர்வே அரசாலும் மக்களாலும் கொடுக்கப்பட்டு வருகின்றது. போரிலே பெரும்பாலும் கடல் வழியாகவும் தரை வழியாகவும் ஆண்களே நேர் நின்று போராடியுள்ளனர் என நோர்வே ஆவணப்பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. விடுதலையின் பின்னர் நீண்ட காலமாக ஆண் போர் வீரர்களுக்கு நாட்டின் மையப்பகுதிகளில் உருவச் சிலைகள் எழுப்பி, மரியாதை செலுத்தி நாட்டு மக்கள் மனங்களில் பதித்து வருகின்றனர்.

அதை வேளை போர் சூழலில் இந்நாட்டுப் பெண்கள் நாட்டை மீட்க பல வழிகளிலும் உதவியுள்ளனர். அவர்களின் அற்பணிப்பும் தியாகமும் நீண்ட காலமாக கவனிக்கப்படாமலே விடப்பட்டன. தமது குடும்பத்தையும், குழந்தைகளையும், வீடுகளையும் பாதுகாத்து ஆண்களுக்கும் உறுதுணையாக நின்று நாட்டை காத்தவர்கள் இந்நாட்டுப் பெண்கள். போரிலே கணவரையும், குழந்தைகளையும் இழந்த பெண்கள் பலர் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

இரண்டாம் உலகப்போரில் நோர்வேயின் விடுதலைக்காக பெண்கள் அனைத்து வழிகளிலும் பங்களித்து உள்ளனர். பல பெண்கள் உளவுத்துறையில் இணைந்து நாட்டை பாதுகாத்திட உதவியுள்ளனர். இருந்தாலும் போரின் வரலாற்றிலே பெண்களின் பங்களிப்பு பேசப்படாத அல்லது மறைக்கப்பட்ட சரித்திரமாகவே உறைந்து கிடந்தன. அண்மைக் காலமாக சில பெண் ஆய்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் இவ்விடயத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதனடிப்படையில் அரசுக்கும், நகர சபைக்களுக்கும் போரில் பெண்களின் பங்களிப்பை ஆதாரங்களோடு சமர்ப்பித்து, அவர்களது தியாகத்தினை வெளிப்படுத்தி வருகின்றனர். இதன் பிரகாரம் இன்று நோர்வேயின் பல நகர சபைகளில் பெண் போர்வீரர்களின் பதிவுகள் வெளிக்கொணரப்படுகின்றமை மகிழ்வை தருகின்றது.




-யூலியஸ் அன்ரனி-

நோர்வே பேர்கன் நகரில் 30 சதவீதமான சிறுவர், இளையோர் கலைகலாசார செயல்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர் என பேர்கன் கலாசார புள்ளிவிபரம் கூறுகிறது. நகரப் பகுதியிலுள்ள ஏராளமான சிறுவர், இளையோர் கலை கலாச்சார நிகழ்வுகளில் கலந்துகொண்டு தமது கலைத்திறனை வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

ஆண்களை விடவும் பெண்களே அதிகமாக கலைக் குழுக்களில் அங்கம் வகித்து ஈடுபடுகின்றனர். ஆண்கள் பெரும்பாலும் விளையாட்டுக்களில் குறிப்பாக உதைபந்தாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிகிறது. பொதுவாக விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டும் சிறுவர்கள் கலை கலாச்சார நிகழ்வுகளில் பங்கெடுப்பது அரிதாகவே உள்ளது.

கலை கலாச்சார நிகழ்வுகளில் பிள்ளைகள் பங்கெடுப்பது தொடர்பில் பெற்றோரின் பங்கு, அவர்களது ஆர்வம், அவர்களது கல்வி நிலை போன்றவற்றிலும் தங்கி உள்ளன. பெற்றோர் கலாச்சார நிகழ்வுகளில் விரும்பி பங்கேற்றால் பிள்ளைகளும் பங்கேற்க அதிக வாய்ப்புகள் உள்ளது. நோர்வையில் கலாசார ஒழுங்கமைப்புகளுக்கு, நடவடிக்கைகளுக்கு சிறப்பான வரவேற்பு உண்டு. அவற்றை மக்கள் பயன் படுத்துகிறார்களா என்பதுவே கேள்வியாகும்.

சிறுவர்கள் இங்கு ஒழுங்கு அமைக்கப்பட்ட கலாச்சார நடவடிக்கைகளில் பங்குபற்றி தமது திறன்களை வளர்த்துக் கொள்கிறார்களா என்பது நோக்க வேண்டிய விடயமாகும்.



Lana Vijayan - “மலையில் விழுந்த துளிகள்”
Foto: Shinthuri Ananthasharma

சிறப்புப் பயிற்சிக் கூடங்களில் அங்கம் வகிப்பது, கலைக்கல்விகளைக் கற்றல், பயிற்சி முகாம்களுக்கு செல்லுதல், போட்டிகளில் பங்கு பற்றுதல், கலை கலாச்சார நூல்களை வாசித்தல் போன்றவைகள் கலை ஆளுமையை வளர்த்துக் கொள்ள சிறந்த ஊடகங்களாகும்.

கடந்த ஆண்டில் நோர்வே பேர்கன் நகரில் 6 தொடக்கம் 15 வயது வரையுள்ள சிறுவர்களின் கலை கலாச்சார பங்களிப்பு எவ்வாறு உள்ளது என கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. அதிலே 30 சதவீதமான சிறுவர்கள் கலாசார நிகழ்வுகளில் தம்மை விருப்பத்தோடு ஈடுபடுத்தி வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது பிள்ளைகள் தமது ஓய்வு நேரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பது நம்மிடையே உள்ள மிகப்பெரும் கேள்வியாகும். இது பற்றி அடுத்து வரும் இதழ்களில் பார்ப்போம்...




2026 FIFA உலகக் கோப்பை ஆண்கள் கால்பந்து போட்டி 2026 யூன் 11 முதல் யூலை 19 வரை அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளில் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற உள்ளது. உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டி இரண்டுக்கும் மேற்பட்ட நாடுகள் நடத்துவது இதுவே முதல் தடவையாகும். இறுதியாக 2002 உலகக் கோப்பை போட்டி தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகள் நடத்தியது. 1970, 1986ம் ஆண்டுகளில் போட்டிகளை நடத்திய மெக்சிகோ மீண்டும் மூன்றாவது தடவையாக உலகக் கோப்பை போட்டியை 2026 இல் நடத்தவிருக்கின்றது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு போட்டி இதுவாகும். இப்போட்டியினை FIFA இன்னும் விரிவுபடுத்த தீர்மானித்து உள்ளது. கடந்த 2022இல் 32 நாடுகளே பங்குபற்ற அனுமதிக்கப்பட்டன, ஆனால் 2026இல் 48 நாடுகள் பங்குபற்றவுள்ளன. இம்முறை நோர்வேயின் அணியும் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளது. நோர்வே 1938, 1994, 1998ம் ஆண்டுகளில் போட்டிக்களில் விளையாடியது. தற்போது மீண்டும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்று 2026ம் ஆண்டு FIFA உலகக் கோப்பை போட்டியில் பங்குபற்ற தயாராகி வருகிறது. இது நோர்வேயின் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

## சட்டம் தன் கடமையைச் செய்யும் விழிப்படையுங்கள்



2020ம் ஆண்டு முதல் புலம் பெயர் வாழ் மக்களின் பிள்ளைகள் தமது பெற்றோரால் அச்சுறுத்தி, வற்புறுத்தப்படும் வழக்குகள் அதிகரித்து வருகின்றன என ஒருங்கிணைப்பு அமைச்சர் Tonje Brenna நோர்வே செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு குழந்தைகள் நல சேவை திணைக்களத்தில் 2743 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள வெளிநாட்டவ இளைஞர்களுக்கு, அவர்களது குடும்பங்களிலிருந்து பாதுகாப்பு தேவைப்படுகிறது. இது 2020ஆம் ஆண்டிலிருந்து 70 சதவீதம் அதிகரித்துள்ளது. அதன் முன்னர் இதுபோன்ற 1622 வழக்குகள் பதிவாகி இருந்தன.

அமைச்சர் Tonje Brenna இந்த விடயத்தை மிகவும் அக்கறையோடு கண்காணித்து வருகிறார். நோர்வேயில் வாழும் இளையோர் தாம் விரும்பும் வாழ்க்கையை வாழ முழு உரிமையும் உண்டு. அவ்வுரிமையை பறிக்கும் பெற்றோருக்கு தான் வேண்டுகோள் விடுப்பதாக Tonje Brenna கூறியுள்ளார். பல பெற்றோர் பிள்ளைகளை தமது விருப்பத்துக்கு வாழப்பணித்து வருகிறார்கள். பிள்ளைகளின் விருப்பமல்லாது தமது தாய் நாட்டுக்கு அழைத்துச் சென்று கட்டாய திருமணம் முடித்து வருகிறார்கள். தமது விருப்பங்களை பிள்ளைகளுக்கு திணித்து வருகிறார்கள், இது சட்ட விரோதமானது. இவ்வாறு செய்துவரும் பெற்றோருக்கு எதிராக பிள்ளைகளே முறையீடு செய்து வருகின்றனர். இம்முறையீடுகள் அதிகரித்து வருகின்றன. உங்கள் பிள்ளைகள் யாரை திருமணம் செய்து கொள்ள வேண்டும், அவர்கள் எத்துறையில் கல்வி கற்க வேண்டும், எங்கு, எப்படி தங்கள் வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதை அவர்களே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு என அமைச்சர் செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.




-யூலியஸ் அன்ரனி-

ஒவ்வொரு ஆண்டும் யூன் 9ஆம் நாளன்று சர்வதேச ஆவணக் காப்பக தினம் கொண்டாடப் படுகிறது, இது 2007 ஆம் ஆண்டு சர்வதேச ஆவணக் காப்பக திணைக்களத்தால் International Council on Archives (ICA) ஆரம்பிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு ICA நிறுவப்பட்டதைக் கௌரவிக்கும் விதமாகவும், ஆவணக் காப்பகம் மற்றும் காப்பகப்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டவும் இந்த நாள் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

உலகமெங்கிலும் உள்ள காப்பக வல்லுநர்கள், அறிஞர்கள் ஆவணக்காப்பகங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒன்றுபடுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டிலும் முக்கியமான கருப்பொருளினை மையமாக கொண்டு இந்நாள் கொண்டாடப்படுகிறது. 2025ம் ஆண்டில் "நோர்வேயிலிருந்து குடிபெயர்ந்தோர் / நோர்வேக்கு குடிபுகுந்தோர்" எனும் கருப்பொருளில் காப்பக நாள் அனுஷ்டிக்கப் படுகிறது. நோர்வேயிலிருந்து அல்லது நோர்வேக்கு இடம்பெயர்வு பற்றிய ஆவணங்களை வழங்க இங்கே ஒரு வாய்ப்பு உள்ளது.

நோர்வேயிலிருந்து அமெரிக்காவிற்கு மக்கள் புலம்பெயர்ந்து 200வது ஆண்டைத் தொட்டு நிற்கிறது. (நோர்வே நாட்டையும், சமூகத்தின் பெரும்பகுதியையும் பாதித்த குடியேற்றமென்பது வரலாற்று முக்கியம் வாய்ந்த கவனத்துக்குரியதாகும்.) அந்நிகழ்வின் பதிவுகளையும், நோர்வே மண்ணுக்கு குடிபுகுந்த மக்களது வரலாற்றுப்பதிவுகளையும் ஆவணப் படுத்துதல் மிக முக்கியமானது என இந்நாளில் இக்கருப் பொருளினை தேர்ந்து அதற்காக பணியாற்றியும் வருகிறார்கள்.

**சர்வதேச காப்பக தினம் மற்றும் சர்வதேச காப்பக வாரத்தின் நோக்கங்கள்:**

- காப்பகங்களின் முக்கியத்துவம் குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- காப்பக மேலாண்மை மற்றும் மேம்பாட்டின் நன்மைகள் குறித்து முடிவெடுப்பவர்களிடையே விழிப்புணர்வையும், முக்கியத்துவத்தையும் ஏற்படுத்துதல்.
- நீண்டகால காப்பகப் பாதுகாப்பின் அவசியம் குறித்த தனியார் மற்றும் பொதுத்துறையினருக்கு புரிதலை மேம்படுத்துதல்.
- காப்பக நிறுவனங்களில் பாதுகாக்கப்பட்ட தனித்துவமான, அசாதாரணமான மற்றும் அரிய ஆவணங்களை காட்சிப்படுத்துதல்.
- உலகளவில் காப்பகங்களின் தெரிவு நிலையை ஊக்குவித்தல். □








1.

காற்று அழைக்கும் போதெல்லாம்
முகம் சுளிக்காமல்
அதன் பின்னால்
சென்றுவிடுகின்றன சருகுகள்

இடை நடுவில் கை விட்டாலும்
இன்னுமொரு காற்று வந்து
உடன் அழைத்துச் செல்கிறது

எங்கு செல்கிறோமென்று
இது வரை காற்றும்
மனம் திறந்து சொன்னதில்லை
சருகுகளும் மறந்தும் கேட்டதில்லை

அழைத்த காரணம் அறிவதற்கிடை
அவை மண்ணோடு மண்ணாகி
மக்கியும் விடுகின்றன

சருகை அழைத்துச் சென்று
திறந்து கிடக்கும் வெளியை
சுற்றிக் காட்டுவதை தவிர
காற்றுக்கும் பெரிதாக
வெறென்ன வேலை இருக்கிறதோ

2.

பறவை பட்சிகளை
அதனதன் முகங்களைக் கொண்டு
அடையாளம் காண்கிறோம்

விலங்குகளையும்
இதர பிராணிகளையும்
புழுப் பூச்சிகளையும் கூட
அவ்வாறே உறுதிப்படுத்துகிறோம்
ஆனால் மனிதர்களை மட்டும்
அவ்வாறு இலகுவில்
அடையாளம் காண
ஒரு போதும் முடிவதில்லை

ஏனெனில் அவர்கள்
எப்போது நிஜமான முகத்தை
அணிந்திருக்கிறார்களென்று
உறுதியாக சொல்ல முடியாதுள்ளது
இங்கு எல்லோரிடமும்
முகமூடிகள்தான் இருக்கின்றன
ஒருத்தரிடம் கூட முகமில்லை

3.

நமக்கென்று வாய்த்த
ஒரேயொரு ஆயுளை
வாழ்ந்து தொலைக்க
இருப்பை தக்க வைக்க
ஏதாவதொன்று கைத் தாங்கலாக
தேவைப்படவே செய்கிறது

அது அன்பைத் தவிர
வேறென்னவாக இருக்குமென
நீங்கள் கருதுகுகிறீர்கள்

ஏனெனில் வாழ்தலின்
ஆணிவேர் அன்பு மட்டும்தான்
அது எப்போது மலருமென்று
நிச்சயித்து சொல்ல முடியாதுள்ளது

ஒரு புன்னகை சொரிவதற்கும்
ஒரு கவிதை யாப்பதற்குமிடை
அது மலர்ந்திடல் தகும்

அன்பென்பது வேறொன்றுமில்லை
அது இரண்டு உள்ளங்களிடை
பொடுபொடுக்கும் மழை


# நரையான்பிட்டி: வண்ணமயமான வலசைப் பறவைகளின் தேசம்: தீவகம்

ஏ.எம்.றியாஸ் அஹமட்



இலங்கையின் வடமேற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே அமைந்துள்ள தீவுத் தொகுதியே தீவகம் என அழைக்கப் படுகின்றது. மண்டைதீவு, வேலணைத்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, காரைதீவு ஆகிய மக்கள் வாழுகின்ற எட்டுத்தீவுகளையும் கண்ணாத்தீவு, பாலைதீவு, கற்கடகத்தீவு, நரையான்பிட்டி, சிறுத்தீவு, கச்சதீவு போன்ற மக்கள் வாழாத தீவுகளையும் தீவகம் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

தீவகப் பகுதிகள் பெரும் ஒத்த பௌதீக தன்மையைக் கொண்டு காணப்படுகின்றன. தீவகப்பகுதிகள் நான்கு நிர்வாகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு, தீவகப்பகுதி வடக்கு, தீவகப்பகுதி தெற்கு, காரைதீவு என்பனவாகும். வேலணைத்தீவையும், மண்டைதீவையும் (மழை காலத்தில் நீரினாலும், மற்றைய காலத்தில் நிலத்தினாலும் தொடர்புபட்டுக் காணப்பட்டதன் காரணமாக) ஒரு தீவாக அழைப்பதனால் தீவுப்பகுதிகளை சப்த தீவுகள் என்று அழைப்பது வழக்கம் இலக்கிய, தொல்லியல் ஆதாரங்களானது தீவகப் பகுதியின் வரலாற்றுத் தொன்மையினையும் அதன் சிறப்பினையும் எமக்கு சிறப்பாக எடுத்தியம்புகின்றன.







## நரையான்பிட்டி:



ஊர்காவற்றுறைக்கும் புங்குடுதீவுக்கும் இடையிலுள்ள கடற்பரப்பில் நரையான்பிட்டி என்ற சிறிய தீவு காணப்படுகின்றது. மக்களில்லாத இந்தத் தீவில் மீனவர்கள் தங்கி மீன்பிடிப்பார்கள். இங்கு அந்தோனியார் ஆலயம் காணப்படுகின்றது. ஆண்டுதோறும் ஆலய திருவிழாவிற்காக மெலிஞ்சிமுனை மக்கள் இந்தத் தீவுக்கு வந்து கொண்டாடுவார்கள். ஏழாற்று பிரிவெனக் கருதப்படும் ஏழு கடலாறுகள் அங்கு ஓடுவதாக மீனவர்கள் கூறுகிறார்கள். அவற்றில் முக்கியமானது பிரண்டையாறு. இந்த ஆறுகளில் கீழ்நீரவாடு-சோநீரவாடு என இருவகை நீரோட்டங்களுண்டு. இந்தத் தீவின் பெயர் வருவதற்கு ஒரு காரணம் இருந்திருக்கின்றது.

## வலசைப் பறவைகள் இலங்கைக்கு இடம்பெயரும் பாதைகள்:

இலங்கைக்கு பிரதானமான மூன்று பாதைகளில் பறவைகள் தங்களுடைய நாட்டிலுள்ள தகாத காலத்தை (குளிர் காலத்தை) கழிப்பதற்காக இடம்பெயருகின்றன.



1) மேற்குப் பாதை: ஐரோப்பா, மேற்கு ஆசியா, மேற்கு சைபிரியா, நாடுகளிலுள்ள பறவைகள் மேற்கு ஹிமாலயா, காஸ்மீர், மேற்கு விந்திய மலை, குமரிமுனை, வழியாக யாழ்ப்பாணம், மன்னார், வில்பத்து, கல்பிட்டி, சிலாபம், பெலன்வில, ஹிக்கடுவ பகுதிகளை அடைகின்றன.

2) கிழக்குப் பாதை: ஐரோப்பா, மேற்கு ஆசிய நாடுகள், கிழக்காசிய நாடுகள், கிழக்கு சைபீரியா, மங்கோலியா நாடுகளிலுள்ள பறவைகள் கிழக்கு ஹிமாலயா, கிழக்கு விந்திய மலை, ராமேஸ்வரம், வழியாக யாழ்ப்பாணக்குடா நாடு, யாழ்ப்பாண வாவி, ஆனையிறவு, சுண்டிக்குளம், பாணமை, குமண, யால, புந்தல, கல்மிட்டியாவ, ரெக்காவ பகுதிகளை அடைகின்றன.

3) அந்தமான் பாதை: தென்கிழக்காசிய நாடுகள், கிழக்காசிய நாடுகளிலுள்ள பறவைகள் அந்தமான் தீவுகள், வழியாக முல்லைத்தீவு, கிழக்கிலங்கை பகுதிகளை அடைகின்றன.

பெரும்பாலான பறவைகள் பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்தை ஒரே தடவையில் நிறுத்தாமல் பறந்து முடிக்கின்றன. தகாத காலம் வரும்போது அதனை கழித்து, இனம்பெருக்கி குஞ்சுகளை தங்களது பிறந்த இடத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதற்கு, தங்களது முன்னோர்கள் பல ஆயிரக் கணக்கான வருடங்கள் பயணம் செய்தது போன்று பல இரவுகளும், பகல்களும் நிறுத்தாமல் பறந்து தங்களது இடம்பெயருகின்ற இடத்தை அடைகின்றன. சுமார் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு அங்குள்ள தாவர விலங்குகளுடன் இயற்கைச் சமனிலைக்குள்ளான ஒரு உணவுச் சங்கிலியை பரிணாமத்தில் உருவாக்கி வைக்கின்றன. உதாரணமாக மீன்களை பிடித்து உண்ணும் போது, இயற்கை மீன் குடித்தொகையை கட்டுப்படுத்தி, பறவைகளின் கழிவிலிருக்கின்ற பொட்டாசியம், பொஸ்பரஸ் அல்காக்களின் வளர்ச்சியை தூண்டி மீன் உற்பத்தியை ஒரு வகையில் கூட்டும். இதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. இயற்கையான சூழ்நிலையில் பறவைகள் மீன்களை பிடித்து சாப்பிடுவது பிரச்சினையான விடயமல்ல.

## நரையான்பிட்டியும், ஐரோப்பிய, ரஸ்ய, சைபீரிய நாரைகளும்:

இந்த நாரைகள் பல நூற்றுக்கணக்கில் இந்தத் தீவில் அல்லது சுற்றயலில் வருடத்தின் சில பகுதிகளில் காணப்படுவதனால்தான் **நா**ரையான்பிட்டி, **ந**ரையான்பிட்டியாக மாறியிருக்க வேண்டும். இந்தத் தீவிலும், இதற்கு அப்பாலுள்ள கண்ணாத்தீவிலும், சில பத்தாண்டுகளுக்கு முன் இயற்கையாக உருவாகி கண்ணாத் தீவுக்கும், நரையான்பிட்டி தீவுக்கும் இடையில் காணப்படும் சிறுகண்ணாத் தீவிலும் பல நூற்றுக்கணக்கான பறவைகளையும், அவற்றின் கூடுகளையும் எப்போதும் காணலாம்.

நரையான்பிட்டி, இடம்பெயரும் பறவைகளின் இலங்கைப் பாதையில் கிழக்கு வழியில் காணப்படுகின்றது. மேலே கூறப்பட்ட வெளிநாட்டிலிருந்து இடம்பெயரும் பறவைகள் நரையான்பிட்டியில் காணப்பட்டதே, இந்தத் தீவின் பெயர் வருவதற்கு காரணமாக இருந்திருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் தொடங்கி, ஏப்ரல்-மே மாத இறுதியில் பல இடம்பெயரும் பறவைகள் இந்தப் பகுதிகளுக்கு வந்து சேருகின்றன. அந்தப் பறவைகளில் இந்திய பாறைக் கொக்கு, பெரிய பிளமிங்கோ, பின்ரெயில் வாத்து, கடார்கனி, விட்ஜியன், கறுப்பு சிறகு கீச்சான், மட்டிகொறிப்பான், கறுப்புத் தலை கடற்புறா, சிறிய கறுப்புத் தலை கடற்புறா, அவொசெற், கஸ்பியன் கொக்கு போன்றவை மிக முக்கியமானவையாகும்.

## பூநாரை அல்லது செங்கால் நாரை:

இந்த இடம்பெயரும் பறவைகளில் மிக முக்கியமானதும், நரையான்பிட்டிக்கும் அதன் சுற்றயலுக்கும் சிவப்பு வண்ணமும், அழகும் சேர்ப்பது பூநாரை என்கின்ற பிளமிங்கோ என்ற பறவையாகும். மத்திய ஆசிய பறப்புப் பாதையினூடாக இந்தப் பறவை இலங்கைக்கு இடம்பெயருகின்றது.







ஏ.எம்.றியாஸ் அஹமட்
Tidligere Senior lecturer in zoology for Eastern University, Sri Lanka

பூநாரை அல்லது செங்கால் நாரை (விஞ்ஞானப் பெயர்: Phoenicopterus roseus, பொதுப்பெயர்: Flamingo) இந்த பறவையானது பொனிகொப்ரெறிடே குடும்பத்தில் 110-150 சென்ரிமீற்றர் (43-59 அங்குலம்) (சுமார் 5 அடி) உயரமுள்ள, 2- 4 கிலோகிராம் (4.4 - 8.8 இறாத்தல்) நிறையுடையதுமான காணப்படுகின்ற மிகப் பெரிய பறவையாகும். ஆனால் 6அடி 2 அங்குல உயரமும், 4.5 கிலோகிராம் நிறையுடைய ஆண் பறவையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்கா, இந்திய துணைக்கண்டம், மத்திய கிழக்கு, தெற்கு ஐரோப்பா பகுதிகளிலுள்ள நாடுகளில் இந்த பறவைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக்குடாநாடு, மற்றும் வடபகுதிகளில் காணப்படுகின்ற பெரும்பாலான பூநாரைகள் ஜெர்மனி, நெதர்லாந்து போன்ற நாடுகளின் எல்லைப்புறங்களிலிருந்தே வருகின்றன என்று ஆய்வொன்று கூறுகிறது. நமது பகுதிகளுக்கு மட்டுமல்லாது பாக்கிஸ்தான், இந்தியா போன்ற பகுதிகளுக்கும் செல்கின்றன. இருந்தும் இலங்கையின் வடபகுதிக் கடல்களில் கிடைக்கும் கூனிகள் காரணமாக பூநாரைகள், இந்தப் பிரதேசங்களையே பெரிதும் விரும்பி வருகின்றன. கடந்த பத்து வருடங்களுக்கு முன் சில பத்து ஆயிரங்களாக இருந்த இதன் எண்ணிக்கையானது, தற்போது அரைவாசிக்கும் குறைந்து காணப்படுகின்றது. இலங்கையின் தென்பகுதிகளில் துறைமுகம், விமானநிலையம், பெருந்தெருக்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் காரணமாக அங்குள்ள புந்தல தேசிய பூங்காவிற்கு பூநாரைகள் செல்வதில்லை.

நீண்டு வளைந்த கழுத்துக்களுடன், இதன் அலகு அகலமாகவும், வளைந்தும் காணப்படும். நீண்ட முடியற்ற சிவந்த கால்கள் காணப்படும். கால் விரல்கள் வாத்துக்கு இருப்பது போலவே சவ்வினால் இணைந்திருக்கும். இதன் அலகு வெள்ளையில் ஆரம்பித்து கறுப்பில் முடியும். சிவப்பும், வெள்ளையும் கலந்த உடலைக் கொண்ட இந்தப் பறவைகளின் இறகுகளின் ஓரங்கள் கறுப்பாக காணப்படும். சேறும், சகதியும் நிறைந்த நீர்நிலைகளில் உணவு தேடும். நீரில் மிதக்கும் உயிரினங்கள், சிறிய மீன்கள், புழு, பூச்சிகளை அலகால் பிடித்து, வடிகட்டி உணவை உட்கொள்ளுகின்றது. இந்தப் பறவைகள் கடும்வெப்பத்தையும், உவர்த் தன்மையையும் தாங்கக்சகூடியன.

பூநாரைகள் நன்றாக நீந்தக் கூடியன. சற்று ஆழமான நீரில் இரை தேடும்போது இதன் வால் மட்டும் நீருக்கு வெளியேயும், உடல் முழுவது நீருக்குள்ளும் இருக்கும். இந்த முக்குளித்த நிலையிலேயே புழுக்களை அரித்து உண்ணும். செங்கால் நாரைகள் வாத்து பறப்பது போன்ற அமைப்பிலோ அலையலையான நீண்ட சாய்வுக் கோடுகளாகவோ வேகமாகச் சிறகுகளை அடித்துப் பறந்து செல்லும். ஒடுங்கிய கழுத்தை நீட்டிப் பறக்கும்போது சிவந்த கால்களையும் சேர்த்துப் பின்னால் நீட்டிக் கொள்ளும். இவை ஒலியெழுப்புவதில்லை. ஆனாலும் சில சமயங்களில் வாத்துகள் போன்று ஒலி எழுப்பக்கூடியவை. இரை மேயும்போது கூட்டத்தில் உள்ள அனைத்துப் பறவைகளும் தொடர்ச்சியாகப் பிதற்றிக் கொண்டிருப்பது போல் தோன்றும்.

ஆழமற்ற நீரில் இறங்கி வரிசையாக நின்று, தலையை நீருக்குள் ஆழ்த்தித் தனக்கே உரிய விந்தையான மேல் அலகைத் தரையில் படும்படி கவிழ்த்து வைத்து முன்னே இழுத்துக் கொண்டு சேற்றைக் கலக்கிய வண்ணம் நடக்கும். இதன் அலகு ஒரு வடிகட்டி போல செயல்படும். சிறு நண்டு, கூனிறால்கள், பூச்சிகள், புழுக்கள், நிலபுழுக்கள், நீர்த்தாவரங்களின் விதைகள், அழுகிப் படிந்த பொருட்கள் இவை பூநாரையின் முக்கிய உணவுப் பொருள்களாகும்.

இதன் சராசரி ஆயுள்காலம் 30 - 40 வருடங்களாகும். விலங்குகள் காப்பகத்தில் பராமரிக்கப்படுபவற்றின் ஆயுள்காலம் 60 வருடங்களாகும்.

இலங்கை வருகின்ற பூநாரைகள் தகாத காலம் கழிப்பதற்கும், தனக்குரிய இணையைத் தெரிவுசெய்வதற்குமே இங்கே வருகின்றன. இங்கு முட்டையிட்டு, குஞ்சுபொரிப்பதில்லை. ஆனால் தெரிவு செய்த இணையோடு தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று கூடுகட்டி, புணர்ந்து, முட்டையிட்டு, குஞ்சுபொரித்து இனம் பெருக்குகின்றன.

பூநாரைகள் உண்ணும் கூனி போன்ற ஒரு வகை கிறஸ்றேசிய உயிரினம்தான் இவற்றின் இளஞ்சிவப்பு நிறத்துக்கு காரணமாக கருதப்படுகின்றன. பறவைகள் காப்பகத்தில் வைத்து பராமரிக்கப்படும் பூநாரைகள் இந்நிறமற்று காணப்படுகின்றன. மாறிவரும் இயற்கை சமநிலை காலமாக இப்பறவையினம் குறைந்து கொண்டே வருகிறது. மனிதர்களின் நடவடிக்கைகளும், உல்லாசப் பிரயாணிகளின் நடத்தைகளும், அவற்றின் வாழிடங்கள் மனிதர்களினால் சுருக்கப்படுதலும் இவற்றின் வரத்துக்கும், இருப்புக்கும் பெரும் சவாலாக இருக்கின்றன.

இந்தப் பூநாரைகள் இலங்கையின் யாழ்ப்பாணக்குடா நாடு, மன்னார் தீவு, தென்கிழக்கு கரையோரப் பகுதிகளுக்கு மட்டும் இடம்பெயர்ந்தாலும், இந்தப் பூநாரைகளின் மிக முக்கிய இடமாக யாழ்ப்பாணக்குடா



நாட்டின் ஆழமற்ற கடற்பரப்புகளும், நீரேரிகளும் காணப்படுகின்றன. இந்த கடற்பரப்புக்களும், நீரேரிகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் பூநாரைகள் பாதுகாக்கப்படும். ஏனெனில் பூநாரைகள் அவற்றின் கழிவில் உருவாகி, மீன்களின் உணவாகி, அவற்றின் வளர்ச்சிக்கு காரணமான நீலப் பச்சை அல்காக்களின் உற்பத்திக்கும், மீன்களின் குடித்தொகைச் சமநிலைக்கும் மிக முக்கியமானவையாகும். □

நன்றி: திருமதி. தாக்ஷாயினி செல்வகுமார்
கலாச்சார உத்தியோகஸ்தர்
ஊர்காவற்றுறை வடக்கு பிரதேச சபை

## நீலத்தீ

தீ மூண்டது.
அழகிய மாந்தீவின் வட திசையிலிருந்து...
தீவுக் கூட்டங்களின் நெஞ்சாங் கூட்டிலிருந்து
உருக்கொண்டெழுந்த நீல நிறத் தீ

நெருப்பெழுந்தால் நீரால் அணைக்க முடியும்
நீரே நெருப்பாய் எழுந்தால்
எந்த நீரைக் கொண்டுதான்
அந்த நீலநெருப்பை அணைப்போம் நாம்.

நீராலும் அணைக்க முடியாத
நீரினாலான நீல நிறத் தீ.
உப்புறைந்த நீரின் கடுகடுத்த
சுட்டெரிக்கும் வெப்பத்தை
இதுவரை அறிந்திலமே...
இப்போது
அறிந்தபின் தறிகெட்டு அலைகிறோம்.



ஏய் கடல் மாதா...!
என்னதான் உன் உத்தேசம் சொல்.
கப்பலேந்திய மாதாவின் கை
கப்பலைப் போல
ஆழிப் பேரலையை எப்போதும்
கையிலேந்தி
எம்மை எச்சரிப்பதென்ன சொல்.

நான்
கடலாள் கதைக்கிறேன் சின்ராசு.
நான் வாழ வழி கொண்டவளே தவிர
அழியவெனவோர் பாத்தியதியுமற்றவள்.

நீங்கள் எதை விதைக்கிறீர்களோ
அதையே அறுவடை செய்வீர்கள் மக்கா.
நான் குற்றமற்றவள்.
உங்கள் நியாயத் தராசில்
நீங்களே ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்.

**-நாடோடி-**

# நடுப்



ஜீ.உ

## அக்கம் பக்கம்: 1

ஏன்?

எப்போதும் பதில் கிடைக்காமல் திரும்பத்திரும்ப கேட்கப்படும் கேள்வி. சமயங்களில் மிகுந்த அலைக்கழிப்புக்கு உள்ளாக்குவது. அன்றைக்கும் அப்படித்தான்.

“உடம்பில ஒரு சொட்டு ரத்தம் கூட இல்லை” பணியாளர்களில் ஒருவர் கூறினார். பின்மண்டையில் அடி. ஒரேயொரு சிறிய துவாரம். அதற்கென்றே காத்திருந்தது போலவே அவ்வளவு இரத்தமும் வெளியேறிவிட்டது போல. காத்துக்கொண்டிருந்த நேரத்தில் சிசிரிவி பதிவு கிடைத்தது. மெதுவாகத்தான் பைக்கில் வந்து கொண்டிருந்தான். பின்னால் வந்த வாகனம் தட்டியபோது சுழன்று விழுந்தான். அவன் கீழே விழுமுன்பே ஹெல்மெட் தனியாக விழுந்து உருண்டது.

உச்ச ஒலியோடு பார்த்துக் கொண்டிருந்தோம். இந்த அடிக்கு இறந்திருக்க வேண்டியதில்லை என்றே நண்பர்கள் எல்லோரும் ஆதங்கத்தோடு கூறிக்கொண்டோம்.

“ஹெல்மெட் மட்டும் சரியாக அணிந்திருந்தால்....”

“வீட்டுக்குக் கிட்டத்தானே யாரோடயோ கதைச்சுட்டு வந்திருக்கிறான் போல..”

குரல்களினிடையே அந்த வீடியோவைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் தரையில் மோதிய கணத்திலிருந்து அவன் உடலில் சிறு அசைவுமில்லை. ஒரு பூ உதிர்வது போல. ஒரு சிறு அதிர்வும் இல்லை. அந்தச் சாவை எதிர்பார்த்து, அதற்கென்றே காத்திருந்தது போல. உயிரோடிருப்பதற்கான எந்த முனைப்பும் இல்லாமல், சாவுக்கு சிறு எதிர்ப்பைக் கூடக் காட்டாமல் அப்படியே ஏற்றுக்கொண்டது போல அமைதியானான்.

## அக்கம் பக்கம்: 2

அதிகாலையில் கண்விழிக்கும்போது அறையில் அவன் உட்கார்ந்திருந்தான்.

என் மேசையில் கையூன்றி சுழல் நாற்காலியில். தூக்கம் கலையாமல் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். அவன் என்னையே எதிர்பார்த்திருப்பது போலவும் இல்லாதது போலவும் தோன்றினான்.

பிறகு அடிக்கடி வருவது வழக்கமாயிற்று. இப்போதெல்லாம் அரைவிழிப்பிலேயே கண்திறக்காமலே உணரமுடிகிறது. அவன்தான் கண் விழித்துக் கொள்ளத் தோன்றுவதுமில்லை. வருவான் என்பது தெரிந்து போயிற்று.

“அந்த க்ரே கலர் கோட் சூட் அணிந்து கொண்டுதானே?”

“உனக்கு எப்பிடி? அங்கேயும் வந்துருந்தானா?”

“ம்ம்ம்”

“அந்த ட்ரெஸ்?”

“அதிலதான் காட்டமான மருந்து நெடியடிக்க ரெடியாகிப் படுத்திருந்தான்”

## அக்கம் பக்கம்: 3

அவள் நீண்டு அடர்ந்த கூந்தலுடன் பேரழகியாக இருந்தாள் என்பது முக்கியமல்ல. ஆடைகளின்றி இருந்தாள் என்பதும் இந்த இடத்தில் அவசியமேயில்லை. முன்னோக்கியா அல்லது பின்னோக்கி நடந்தாளா என்பது குழப்பமாயிருந்தது. உடல் மேல்நோக்கி மல்லாந்திருக்க கைகால்கள் பின்புறமாக தரையில் ஊன்றி நடந்தாள் அல்லது வேகமாக நகர்ந்தாள்.

பார்க்க மனமின்றி, சரியாகச் சொன்னால் தைரியமின்றி திரும்பிக் கொண்டேன். அவள் பிரசன்னத்தை உணரும்போதெல்லாம் அப்படித்தான். திரும்புவதில்லை. இப்போது இதை வாசிக்கும் நீங்களும் அவ்வாறேயிருங்கள். ஒருவேளை பின்னொரு நேரம் நள்ளிரவில் தனித்திருக்கும் போது ஞாபகம் வரலாம். தூங்கும்போது அருகில் மூச்சுச்சத்தம் கேட்கலாம். அப்போதும் திரும்பிவிடாதீர்கள்.

## அக்கம் பக்கம்: 4

உச்சி வெயில். அடர்ந்து கிளைபரப்பிய மர நிழலில் பெஞ்சில் உட்கார்ந்திருந்தேன். வெறுமை சூழ்ந்த உலகில் ஒற்றைக் குரலாய் ஒரு காக்காய் கத்திக்கொண்டிருந்தது.

இரவு தூக்கமில்லாத தோற்றத்தோடு அருகில் வந்திருந்த நண்பன், முனகலான குரலில் கேட்டான், “நாங்களெல்லாம் அங்கயிருந்து இவ்வளவு தூரம் வந்து நிக்கிறம் ஏரியாக்காரன் பிரதாப்பைக் காணேல்ல பாத்தீங்களா?”

“அதானே” என்று சொல்ல வாயெடுத்தேன். உண்மையில் எனக்கும் அப்படித்தான் சற்றுமுன் தோன்றியிருந்தது. எதுவும் சொல்லாமல் அவனைப் பார்த்தபோது, அவனும் சற்றுத் துணுக்குற்றவன் போல் பார்த்தான். இருவரும் பிறகு பேசிக்கொள்ளவில்லை.

மோச்சுரியில் இருக்கும் அவனுக்காகத்தானே நாங்கள் எல்லோரும் காத்துக்கொண்டிருந்தோம்.



# பக்கம்

மாஜி

## அக்கம் பக்கம்: 5

நீண்ட நெடுநாட்களின்பின் ஒரு யாழ் மினிபஸ் பயணப் பாக்கியம் பேருந்துக்கான வாய்ப்பு இல்லையோ என்ற சந்தேகத்தில் ரோசாவில் தொற்றிக்கொள்ள நேரிட்டது. கடைசிக்கு முதலில் ஒரு தனியிருக்கை கிடைத்தது. அமரச் செல்கையில் ஒரு காட்சி தென்பட்டது.
கடைசியிருக்கையில் இருவர் மட்டும் யன்னலோரப் பெண்மணி அருகிருந்த ஆண்மணி தொடைமீது அட்டணக்கால் போட்டிருந்தார், ஆண்மணி ஒத்தடம் கொடுப்பது போல இருந்தார். அடிக்கிற வெக்கையில்.. என மனம் ஆரம்பித்து, அந்தப் பெண்மணிக்கு என்ன கால் உபாதையோ என்று தோன்றிற்று.

அடுத்த நிறுத்தத்தில் ஏறிய சில பெண்மணிகள் அந்தப் பக்கம் கொடூரமாக முறைத்துக்கொண்டே போய் அமர்வதைக் காண முடிந்தது. என்பின்னே அமர்ந்திருந்த ஒரு பெரியம்மா உஸ்ணமாக, உக்கிரமாக அருகிருந்த பெண்மணியிடம் யாரையோ கருவிக்கொண்டே இருந்தார்.

அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் போலவே, போகப் போகப் பின்னால் போய்க்கொண்டே இருக்கலாம் என மினிபஸ் நடத்துனர்கள் இன்னமும் நம்புகிறார்கள். "பின்னால இடமிருக்கு போங்கோ" என நம்பிக்கையுடன் சொல்லும்போது பிரபஞ்சம் ரோசா பஸ்ஸை ஒரு புகையிரதம் அளவுக்கு நீட்டிவிடும் என நம்புவதாகத் தெரிகிறது.
மாறாதது மாற்றம் மட்டுமல்ல யாழ் மினிபஸ் பயணமும்தான். பெருசு ஒருவருக்கு சீட்டைக் கொடுத்து, அவஸ்தையான அருமையான பயணம் ஏதோ ஒன்று குறைவது போலத் தோன்றியது. அதிகம் யோசிக்க விடாமல் சரியாக அதே நேரத்தில் ஒலிக்க ஆரம்பித்தது, "தூதுவள எல அரச்சி.." அடிக்கடி பயணத்தில் கேட்டதிலோ என்னவோ, முன்னிருக்கையில் உட்கார்ந்திருந்த ஈராயிரக்குழவி இளைஞர் வாய்விட்டு உற்சாகமாகப் பாட ஆரம்பித்தார். அவரைச் சூழ நின்றிருந்த பெண்மணிகளுக்கு அது ஒவ்வாமையாக இருந்தது. சுருதி சரியில்லையென்று எண்ணினார்களோ என்னவோ.
நகரில் கடைசி நிறுத்தத்தில் இறங்கும்போது, வழமை போல யாழ்ப்பாணத்துக்கேயுரிய "தட்டுப்பாட்டு லைன் அவசர சிண்ட்ரோம்" பயணத்துக்காகத் தொற்றிக்கொள்ள முண்டியடித்து இறங்கினார்கள். பின்னிருக்கை ஆண்மணியானவர் பெண்மணிக்கு கைலாகு கொடுத்து கைகோர்த்து இறங்கச் சொல்ல, பின்னாலிருந்து பெரியம்மா குரல், "பாத்து கவனமா துலைஞ்சு போடாமா" என்று பக்குவம் சொன்னது.

## அக்கம் பக்கம்: 6

கூடவே வந்த நண்பருக்குக் கடும்பசி. வெள்ளிக்கிழமை, சைவம்தான் வேண்டுமென அடம் கண்ணில் பட்ட ஒரு சைவ பவன். "உயர் தர" என்று போட்டிருக்கவில்லை. சந்தேகமாகவே சாப்பாட்டில் கையை வைத்தால் ஏமாற்றவில்லை. சுமார்தான். முடித்து கல்லாவுக்குப் போனால், அங்கு இன்னும் ரெண்டுபேர். நண்பர் பீடா கேட்டார்.

கல்லாசாமி எங்கோ வெறித்தபடி வியாபாரம் பேசினார். காதில் விழவில்லை. மூன்றாவது தரம் நான் உரக்க அழைத்து வெளியேற முற்பட்டபோது விரோதமாகப் பார்த்துக்கொண்டு கொடுத்தார்.

இந்தச் சம்பவத்தை நண்பன் ஒருவனிடம் கூறியபோது, "அய்யோ அவரா சரியான திமிர் பிடிச்சவராச்சே? நாங்க மரக்கறி வாங்கிற கடையிலதான் அவர் ரெண்டு நாள்பட்ட மரக்கறிய வாங்குவார்" என்றான்.

"யாழ்ல திமிர் பிடிக்காத கடைக்காரர் இருக்கினமோ ப்ரோ? ஆனா பழைய மறக்கறி வாங்கிறதுக்கு எதுக்கு திமிர்?"

"இல்ல.. அந்தக் கடைய வச்சு நாலைஞ்சு காணி வாங்கினவர் அதான்"

"நல்ல விஷயம்தானே.. ஆனா அதுக்கு எதுக்கு கஸ்டமர் மேல..." புரியவில்லை.

கடை பெயர்ப்பலகையிலேயே, "வியாபாரம் செய்து காணி பல வாங்கிய திமிர் பிடித்தவர் நடாத்தும் கடை" என்று எழுதிவைத்தால் நாம் போகாமல் தவிர்த்துவிடலாம் இல்லையா?

சரி, அவ்வளவு திமிர் கொண்டவர்கள் சாப்பாட்டுக் கடை நடாத்துவது சரியா? என்றொரு கேள்வியும் எழுந்தது.

எப்படியோ இன்னொருவர் சாப்பிட்டு காசு கொடுக்கும்வரை காத்திருந்து வாங்கிக்கொள்வது என்ன பிழைப்பு பாருங்கள். அதுவும் சோ கோல்ட் கண்ட கண்ட ஆக்கள் எல்லாம் வந்து சாப்பிட்டு. "உப்புப்போட்ட டூத்பேஸ்டில் பல் விளக்குபவர் செய்யும் காரியமா இது?" என்று ஏன் யாரும் இன்னும் யோசிக்க ஆரம்பிக்கவில்லை என்று தோன்றியது.

நியாயமாகப் பார்த்தால் கடையைப் பூட்டிவிட்டு, கதவுக்குப் பக்கத்தில் கதிரையைப் போட்டுக்கொண்டு திமிராக உட்கார்ந்திருப்பதுதானே முறை! வேண்டுமானால் "திமிருக்கே பிடித்தவன்" என்று ஒரு போர்டும் வைத்துக்கொள்ளலாம்.

சாப்பாட்டுக்கடை பசித்தவர்களுக்கு உணவிடுவது ஒரு அருமையான சேவை.
அதை இன்முகத்தோடு சக மனிதனை மதித்து நடாத்துதல் இன்னும் பெரும்சேவை.
யாழில் சாப்பாட்டுக்கடை மட்டுமல்ல, எங்கேயுமே கஸ்டமர் கெயார் என்பது உச்சமே!

எப்போதும்போல "சந்திக்குச் சந்தி முஸ்லிம் ஹோட்டல்கள் வரவேண்டும்!" என்று நண்பனிடம் சொல்லிக் கொண்டேன். □



# தேவை, புரிதலும் தெளிதலுமே! சட்டங்களும் நம்பிக்கைகளுமோ, நக்கலும், நகைப்புகளுமோ அல்ல!

**விக்னேஸ்வரன் SK - கனடா**

உலகெங்கும் வாழ்கின்ற எல்லா ஒடுக்கப்பட்ட இனங்களும் தமது உரிமைகளுக்காகக் குரலெழுப்புவதற்கும், உலகில் வாழும் அனைத்து இனங்களையும் போல அவையும் அவற்றின் கலாசாரம், பண்பாடு, அவை கொண்டுள்ள மத நம்பிக்கை, அவை பேசும் மொழி, அவை பேணி-வரும் பாரம்பரியப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் என்ற இவ்வுலகில் வாழ்வதற்கான தமது வாழ்வியல் நடைமுறைக்கு அவசியமானதென அவர்கள் கருதும் எல்லாவகை அம்சங்களும் கவனிக்கப்படுவ்தற்கும் மதிக்கப் படுவதற்கும், பேணப்படுவதற்குமான எல்லாவகையான செயற்பாடுகளுக்குமான சுதந்திரத்தையும் பெற்றவர்களாக வாழும்போதுதான் ஒரு பல்லின பல்மத சமுதாயம் முழுமையான சுதந்திரத்தை அனுவிக்க முடியும்.

இவை அனைத்தும் அந்தக் குழுமங்களது அடிப்படை உரிமை என்பதை சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன்னதாகவே வரயறை செய்திருந்தது. ஆயினும் இன்றைவரை இனங்களுக்கு இடையிலான, மதங்களுக்கு இடையிலான பரஸ்பர அங்கீகாரத்தையோ, குறைந்த பட்சம் புரிந்துணர்வையோ இனங்களிடையே முழுமையான பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடிய நல்லுறவையோ ஏற்படுத்துவதில் அல்லது அதற்கான நடவடிக்கைகளில் உலகளாவியல் ரீதியில் பெரிய அளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியவில்லை. குறிப்பாக மொழியும் மதமும், அவை பற்றிய சுய பெருமிதங்களும் மக்களிடையேயான நல்லுறவுக்குப் பெருந்தடைகளாக இன்னமும் உலகளாவிய ரீதியில் இருந்துதான் வருகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசியல் அதிகாரத்துக்கான ஆளும் வர்க்கங்களுக்கிடையிலான போட்டியில், இவை இரண்டும் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன.

இலங்கை ஒரு நாடாக செழிப்பாக முன்னேறுவதற்கான எல்லாவகையான இயற்கை வளங்களையும் கொண்ட ஒரு நாடாக இருந்த போதும், அதன் சுதந்திரத்துக்குப் பின்னான எல்லாக் காலங்களிலும், அதன் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் மிகப் பெரும் தடையாக இன்றுவரை நிலவி வந்ததும், வருவதும் இத்தகைய இனங்களுக்கிடையிலான மொழி, மதம் என்ற இரு முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட காரணங்கள் தான்.

ஆட்சிக்கு வந்த, வருகிற எல்லா அரசியற் தலைமைகளிடையேயும் இவை இரண்டும் தான் நீண்ட காலமாக அவர்களது ஆட்சி அதிகாரப் போட்டிக்கான அடிப்படை அம்சங்களாக இருந்து வந்திருக்கின்றன. அதிகாரத்திற்கு வரவிரும்பும் ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட இன வாத-மும் மதவாதமும், தவிர்க்க முடியாமல் ஒடுக்கப்படும் இனங்களுக்கிடையிலும்கூட, பரவலாக ஊடுருவி இருப்பதால், அவற்றுக்கிடையேயான விரிசல்களும், சில வேளைகளில் பிளவுகளும் பெருகுகின்றன. இதனால் இலாபம் பெறுவது ஆளும் வர்க்கங்கள் என்பதையும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பிளவு இது என்பதையும் அறியாமலே ஒடுக்கப்படும் இனங்கள் தம்முள் முரண்பட்டு மோதிக்கொள்ளும் நிலமைகள் பெருகி வருகின்றன. “ஊர் பிளவுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்” என்பதை அறியாமலே சிறுபான்மை இனங்கள் தம்முள்ளே பிளவுண்டு பகையுணர்வுக்குள் தள்ளப்படுகின்றன.

ஒடுக்கப்படும் மக்கள் மத்தியிலிருந்து வருகின்ற அவற்றுள்ளே இருக்கும் ஆளும் வர்க்கத்தினர், இதைப் பெரிதாக ஊதிப் பெருப்பித்து தமது தனிப்பட்ட நலன்களை பெருக்கிக் கொள்கிறார்கள். அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்றும் கொள்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை மக்களுக்கிடையிலான பிளவு நிலவுவதால் தான், அவ் வர்க்கத்தினர்க்குத் தனிப்பட்ட நீதியிலான நலன்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், அனைத்து மக்களுக்குமான ஒரு நாடாக, அனைத்து இனமக்களையும் இணைத்த சமுக,

பொருளாதார ரீதியாக முன்னேறிவரும் ஒரு நாடாக, அதை உருவாக்கவேண்டும் என்பதில் அவர்களுக்கு ஒருபோதும் அக்கறை இருந்ததில்லை அப்படி இருக்கப் போவதுமில்லை.

அதேவேளை, ஒடுக்கப்படும் மக்களது குரலை எழுப்பி, அவர்களது நலன்களுக்காகப் போராடுவதற்கு முன்வரும் இளம் தலைமுறையினரிடமும் கூட, இது பற்றிய புரிதல் மிகவும் சொற்பமாக அல்லது முற்றாகவே இல்லாததாகவே இருக்கிறது. ஒடுக்கப்படும் இனங்களிடையே நிலவும் அவர்களது மதம் சார்ந்த நம்பிக்கைகள் நடைமுறைகள் என்பவைகளில் பெரும்பாலானவை, காலம் காலமாகப் பேணப்பட்டு வந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சிகளாகவே இன்றுவரை தொடர்கின்றன. இன்றைய காலத்துக்குப் பொருந்தாத, வரலாற்றில் ஏதோ ஒரு காலத்தில் நிலவிய வாழ்க்கைமுறை, உற்பத்தி முறை, அதன்காரணமான உற்பத்தி உறவுகள் என்பவற்றைப் பேணும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்களில் பல இன்றுவரை, ஒடுக்கப்படும் மதங்களின் வாழ்வியலோடு இணைந்து இன்னமும் நடமுறையில் உள்ளன. அவற்றில் பல, இன்றையகால உற்பத்தி முறையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் காரணமாக, இன்றைய வாழ்வியல் நடைமுறைக்கும் தேவைக்கும் பொருத்தமற்றவையாக மாறியும் விட்டன. ஆயினும் இன்னமும் சில அப்படியே, அவை “தெய்வ சித்தத்தின்” பாற்பட்டவை என்ற அடிப்படையில் தொடர்ந்து வருகின்றன.

இவை பற்றி. சமூக மட்டத்தில் பரவலான விமர்சனங்களும், விவாதங்களும் நடக்கின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இத்தகைய விவாதங்களுக்கு முன்வைக்கப்படும் காரணங்களின் அளவுக்கு, ஒருவகைச் சடங்குகள் போல மக்களிடையே நடந்துவரும் அத்தகைய நடவடிக்கைகள் சம்பந்தமான புரிதல்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் முயற்சிகள் நடப்பதில்லை. தவிரவும் இது போன்ற காரணங்களை மறுப்பதற்கு முன்வைக்கப்படும் காரனங்களும் கூட பெருமளவுக்குப் பொருத்தமானவையாக இருப்பதில்லை.

இங்கு நடக்கும் இரண்டு முக்கியமான விடையங்கள் இது சார்ந்து நடப்பதை நாங்கள் காணலாம் ஒன்று, ஒரு சாராரது மத அல்லது தெய்வ நம்பிக்கை சார்ந்த ஒரு நடவடிக்கையை செய்யவேண்டாம் எனத் தடுப்பதற்கு, இன்னொரு மதம் சார்ந்த கருத்து நிலையை காரணம்காட்டி முன்வைப்பது.

உதாரணமாக கிராம மக்களது சிறு தெய்வ வழிபாடு செய்யும் கோவில்களில் வேள்விகளின் போது வழிபாட்டின் ஒரு அம்சமாக மிருக பலியிடப்படல் நடப்பவதற்கு எதிராக, அதைத் தடைசெய்யக் கோருவது. எத்தகைய நியாயமான காரணங்களையும் முன்வைக்காமல், அந்த வழிபாட்டில் ஈடுபடும் மக்கள் தமது பாரம்பரிய வழிபாட்டு முறையின் படி அதைத் தொடர்வதால் அவர்கள் தம்மளவில் அடையும் மன நிறைவைச் சிறிதும் கணக்கில் எடுக்காமல், அதற்காக



அவர்கள் மத்தியில் உரிய காரணங்களைச் சொல்லி போதனைகளில் ஈடுபடுவதை மேற்கொள்ளாமல், செய்யப்படும் ஒரு நடவடிக்கை இது. தமது மனச்சாந்திக்கான சடங்கு நடவடிக்கையை அடாத்தாக நிறுத்த முயலும் முயற்சி சாதாரண மக்களால் நிச்சயமாக எதிர்க்கப்படும். ஏற்கனவே இது யாழில் நடைபெற்றது.

இரண்டாவது, முஸ்லிம் மக்கள் மத்தியில், இளவயதிலான திருமணங்கள் பெண் பிள்ளைகளுக்குச் செய்து வைக்கப்படுகிறதாகக் கூறப்படும் நடவடிக்கை சார்ந்தது. இஸ்லாமிய மதம் பரவிய காலம், அவர்களது நாடு கடந்த வியாபாரங்கள் தொடர்ச்சியான யுத்தங்கள், அவற்றின் பின்னணியில் உருவாகியிருக்கக் கூடிய அக்காலத்துக்குப் பொருத்தமான நடைமுறைகள் ஒரு பண்பாடாக வளர்ந்திருக்கும் இன்றைய நிலையில், அதுவும் ஒருமதம் சார் நம்பிக்கை சார்ந்ததாக இருக்கிறது. முதலாவது மிருகவதை சார்ந்தது என்றால், இரண்டாவது, பெண் குழந்தைகளைச் சீரழிப்பது என்று இன்றைய புரிதலுடன் ஒருவரால் சொல்ல முடியும் தான். ஆனால், இந்த இரண்டிலும் உள்ள இன்றைய நியாயங்களுக்கு அப்பாலான மிக முக்கியமான நடவடிக்கை, இந்தச் சடங்குகளுக்குக் காரணமான வரலாற்றுக்கான தேவைகள் எப்படி எழுந்தன என்பதைப் பற்றி ஆராயாமல், அது பற்றிய விளக்கங்களை மக்களிடமோ, மத செயற்பாட்டாளர்களிடமோ, அவற்றுக்கான தேவை இப்போது இல்லை என்று எடுத்துச் செல்லாமல், அவற்றை இழிவுபடுத்தி விமர்சனம் செய்வதும், தடுத்து நிறுத்த முயல்வதும், அதைச்செய்யும் மக்கட்பிரிவினரை காட்டுமிராண்டிகள் என்று வரையறை செய்து அவமதிப்பதும் மிகுந்த கண்டனத்துக்குரியவை.

உண்மையில், மாற்றங்கள் எவையும் மக்கள் ஏற்றுக்கொண்டாலன்றி நடமுறைக்கு வரப்போவதில்லை. தேவையற்ற குழப்பங்கள், நெருக்கடிகள் மோதல்கள் மக்கள் மத்தியில் ஏற்படாதிருக்க இந்த வகையான விடையங்களையிட்டு அரசியல் வாதிகள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும் இவற்றை மிகமேலோட்டமாக, அந்த மக்களது நம்பிக்கைகளைப்பற்றிய அவர்களுடனான உரையாடல்களூடாக அல்லாமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று சாதித்துவிட முடியாது. செய்யவும் கூடாது. □




# நம் வீழ்ச்சியின் பிரதிபலிப்பு

Mohamed Ali Yaseer Arafath

கடுகு சிறிதாக இருந்தாலும் காரம் பெரிது என்பது போல உலக வரைபடத்தில் சிறியதாய் இருந்தாலும், மாலைதீவு இன்று ஒரு பெரும் பாதையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. கடந்த மே மாதத்தில் மாலைதீவு வரவேற்ற உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை 135,000-ஐ தாண்டியுள்ளது. அதே நேரத்தில் இலங்கை 132,000 பயணிகளோடு பின்னணியில் நின்றுவிட்டது. மலேசியாவை நாம் ஒப்பிட தகுதியில்லை என்ற போதும் தகவலுக்காக மலேஸியா உல்லாசப் பயணிகள் வருகை மே மாதத்தில் 20 லட்சத்தைக் கடந்துள்ளது. இந்த எண்ணிக்கைகள் வெறும் புள்ளிவிவரங்களாகத் தெரியலாம், ஆனால் இவை நம் சூழ்நிலையை உணர்த்தும் முக்கியக் குறியீடுகளாக உள்ளன.

இந்நிலையில், மாலைதீவு ஹுல்ஹுமாலே(Hulhumale) நகரில் சர்வதேச நிதி மையம் ஒன்றை (International Financial District) திட்டமிட்டே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இது ஒரு ஆரம்ப முயற்சி என்ற போதிலும், சர்வதேச முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தங்களை மேம்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த நகரம் இயங்கத் தொடங்கும் போது, இலங்கையின் துறைமுக நகரத் திட்டத்துக்கு (Port City Colombo) நேரடி போட்டியாக அமையும் என்பது சிறிதும் சந்தேகமில்லை.
ஆனால், இந்த போட்டியில் நம்மால் வெற்றி பெற முடியுமா?

துறைமுக நகரம் என்பது இலங்கை வரலாற்றின்




மிகப்பெரிய முதலீட்டு திட்டங்களில் ஒன்றாகும். இது நம் நாட்டை ஒரு நிதி மையமாக மாற்றும் இலட்சியத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று அதன் பெயரே சர்வதேசத்தில் ஒரு இடையூறு, சிக்கல், தீராத குழப்பம் எனப்படும் நிலையில்தான் உள்ளது.

ஏன் இப்படி ஆயிற்று?

திட்டத்தை மேடையில் அறிவிக்கிற பொழுது வித்தை காட்டுபவர்கள், அதை நடைமுறையில் மாற்றும் பொழுது விரைவில் மறைவதையே பார்க்கிறோம். இதுவரை துறைமுக நகரம் குறித்து பிரத்தியோக சட்டங்கள் இன்னும் வகுக்கப்படவில்லை. நிர்வாக கட்டமைப்புகள் உரிய முறையில் செயல்படவில்லை. சர்வதேச நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டிய

நேரத்தில், நாமே நம்மை உலகம் முன் சந்தேகிக்க வைத்துவிட்டோம். 2015இல் யஹபாலன காலத்தில் இந்த திட்டம் நிறுத்தி Review செய்யப்பட்ட போதே அதன் தலையில் பலமான அடி விழுந்து விட்டது இந்த பைத்தியக்காரத்தனமான குறுகிய அரசியல் இலாபங்கள் கருதிய வேலைகளின் பாதிப்பை இவர்கள் உணர்வதில்லை.

இதற்குப் பிறர் காரணமில்லை. நாமே நமக்கு விரோதிகள். நம் குழப்பக் கலாச்சாரம், திட்டமிடல் குறைபாடு வெட்டி செயல்விளக்கங்கள், நோக்கமற்ற தலைமைத்துவம் - இவை எல்லாம் இணைந்து நம்மை இழுத்தடிக்கின்றன.

இப்போது மாலைதீவைப் பாருங்கள். திட்டத்தை விளம்பரப் படுத்துகிறார்கள். சட்ட அமைப்புகளை உருவாக்குகிறார்கள். சர்வதேச நிபுணர்களுடன் வேலை செய்கிறார்கள். வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உறுதியாக கையாண்டு கொண்டிருக்கின்றனர்.

அவர்களின் செயலூக்கம் உறுதி நம்மை வெட்கப்பட வைக்கிறது. அவர்கள் உருவாக்கும் வளர்ச்சி நம்மை பின்னுக்குத் தள்ளுகிறது. நாம் பேசியதும் பேச்சாகவே, திட்டமிட்டவை உருப்படி காணாமல், விமர்சனங்களும் வீண் பேச்சுகளுமாகவே இருந்து வருகின்றன. நம் இடரின் வேரே நம்மில்தான் உள்ளது. முன்னேற்றம் குறித்த அறிவும், செயல் நோக்கும் இல்லாதவர்கள் அதிகாரத்தில் இருக்கும்போது, மேடை பேச்சுகளிலேயே எல்லாம் முடிந்துவிடும் எதிர்கால வளர்ச்சியை எப்படிப் பார்க்க முடியும்?

இலங்கையின் துறைமுக நகரம் ஒரு காலத்தில் கோலோச்சக் கூடிய இலட்சியம். ஆனால் இன்று அது பெயரில் மட்டுமே உயிருடன் இருக்கிறது.





அதற்குத் தேவையான சட்டத் தளமும், நிர்வாகக் கட்டமைப்பும் இல்லாத நிலையில்தான் உள்ளது. இதே நேரத்தில், மாலைதீவு போலியான நாடுகள் கூட உறுதியான நடைமுறைகளுடன் உலக அரங்கில் கால்பதிக்கத் தயாராகின்றன.

இது எச்சரிக்கையல்ல - விழிப்புணர்வு அழைப்பு. இன்றே நாம் விழிக்க வேண்டிய தருணம் இது. இல்லையெனில், வருங்காலம் நம்மை கடந்த காலத்திலேயே தொடர்ந்து வாழ வைக்கும். □

## யார் கள்வன்...?

பூநகரி, கௌதாரிமுனை கடற்கரை சார்ந்த பகுதிகளில் மிகப்பெரும் மணல் மலைகளைக் கொள்ளையடித்து, “கொழும்பு port city" திட்டத்துக்கு விற்றவர்கள் வேறு யாருமல்ல, நமது தமிழ் அரசியல்வாதிகளே.

தமிழ்த்தேசியம், மண்மீட்பு என மேடைகளில் பாசாங்குப் பேச்சுக்களைப் பேசி மக்களை மடையர்களாக்கிவிட்டு, மண்ணை விற்றவர்கள் நமது இந்தத் **தமிழ் அரசியல் வாதிகள்தான்.**




இனி மக்களாக விழிப்படைந்தால் மட்டுமே எஞ்சியுள்ள மண்ணையாவது காப்பாற்ற முடியும். இல்லையேல் எல்லோருமே ஒட்டுமொத்தமாக கடலுக்குள் மூழ்கிச் சாக வேண்டியதுதான்.

-தமயந்தி.

# சின்ன வெங்காயம்

-தமயந்தி.



விடுமுறைகாலம் முடிந்து விட்டது.
இந்த ஒரு மாதமும் எப்படி ஓடிப் போனது என்றே தெரியவில்லை. விமானப் பயணப்பட இன்னும் மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. கொழும்புப் பயணம் ஒரு நாளை விழுங்கிக் கொண்டால் இன்று ஒரு நாள் மட்டும்தான் யாழ்ப்பாணத்தில் நிலை கொள்வதற்கான கைவசமாக இருக்கின்றது.

நேற்றைய முன்தினம் எனது சின்ன வயசு நினேகிதர்களான விசேந்திரன் விதானையாரையும், அண்ணாவி பவானையும் யாழ்ப்பாணத்திலுள்ள ஹஸீம் காக்காவின் கருவாட்டுக் கடையில் சந்தித்து சிறிது நேரம் கதைக்க முடிந்ததே தவிர, ஆறுதலாக அவர்களோடு அமர்ந்து ஒன்றையும் பகிர்ந்துபேச முடியவில்லை. கைவசமுள்ள இந்த ஒரு நாளில் மீண்டும் அவர்கள் இருவரையும் கண்ணாடி பாரில் சந்தித்து ஆளுக்கொரு பியர் அடித்துக்கொண்டு கலந்துரையாடுவதாகத் திட்டம்

******
30கிலோ பலதும் பத்துமாய்க் கொண்டுவந்த சூட்கேஸை மீண்டும் பற்றிக்ஸ் நைட்டி, சோட்டி, சாறம் வகையாறா துணிமணிகளும், ஒடியல்மா, மிளகாய்த்தூள், மிக்ஸர் பைக்கட், எள்ளுருண்டை, கட்டா, கணவாய்க் கருவாடுகள், கடல்த்தாமரை வத்தல், வேப்பம்பட்டை, வெள்ளரி, பூசணி விதைகள், சித்தா தைலம், ராணி சந்தணசோப் என இன்னும் பலதும் பத்துமாய் 30கிலோவை இட்டு நிரப்பி மினி ஆமைப்பூட்டு போட்டுப் பூட்டி வைத்தாயிற்று.

இந்தப் பொருட்களின் பட்டியலைப் பார்க்கும்போது இறுதியாக 82இல் கரையூர் கிட்டங்கித் துறையிலிருந்து கச்சதீவுப் (பண்டமாற்றுவணிகம்) பெருநாளுக்குப் போகும்போது 2 மில்க்வைற் பார்சோப், 12ராணிசோப், 6போத்தல் தேங்காயெண்ணைக் கலன், மான் மார்க் குடை, சிங்கமார்க் டோச்லைட் என கொண்டு புறப்பட்டது நினைவுக்கு வந்தது.

அண்ணாவியனையும் விதானையனையும் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் ரவுணுக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கும்போது “மாமா..., மாமோய்..” என அழைத்தபடி மருமகள் ஓடிவந்தாள். பதகளிப்பட்டபடி என்னவென்று விசாரித்தால்..... மினி குண்டொன்றைப் போட்டாள் மருமகள். பயணப்படவுள்ள பிளைட் டிக்கட்டின் கடைசிப் பக்கத்தைச் சுட்டிக் காட்டி வாசிக்கச் சொன்னாள். 25Kg.

வரும்போதுதான் 30கிலோ, போகும்போது 25கிலோ மட்டுந்தான் என்பதை அறிந்ததும் வெடிமேல் வெடி விழுந்தது. இனி, பூட்டுப்போட்ட சூட்கேஸிலிருந்து ஐந்துகிலோ எடையளவான எதைத்தான் எடுத்துக் குறைப்பது. மிளகாய்த்தூளில் ஒரு பைக்கட், மிக்ஸரில் ஒரு பைக்கட், கச்சான் அல்வா.... இப்படியே குறைத்தும் தீர்ந்த பாடாயில்லை. நான் பாவித்த துவாய், டெனிம் காற்சட்டை, ஜக்கெட் போன்ற பாரமான உடைகளையும் எடுத்துக் குறைத்தாகி விட்டது. ஓரளவுக்கு ஐந்து கிலோ மைனஸ் செய்தாகிவிட்டது. மீண்டும் சூட்கேஸைப் பூட்டுப் போட்டுப் பூட்டிவிட்டு யாழ் செல்வதற்காக முற்றத்தில் இறங்க மீண்டும் “மாமா..., மாமோய்..”

“என்னடியப்பா...?”
“மாமி லைனில நிக்கிறா. உங்களுக்கு அடிக்க அடிக்க எடுக்கிறீங்க இல்லையாம்... கோவத்தோட இருக்கிறா. இந்தா கதைங்கோ மாமா”

30கிலோவானது 25கிலோ ஆகிப்போன சம்பவத்தை மந்திரிகுமாரிக்கு ஒப்புவித்தாயிற்று. பின்பு, சூட்கேஸில் உள்ளடக்கமான பொருட்களின் பட்டியலும் ஓரளவு சொல்லியாயிற்று. ஒன்றும் தவற விடவில்லை என்ற எனது உறுதி மந்திரிகுமாரியின் அடுத்த ஒரு கேள்வியில் உருக்குலைந்து சரிந்து விழுந்தது.

"அப்போ சின்ன வெங்காயம் என்னாச்சு...?" என்ற கேள்வியே அது.
"இங்க எல்லா இடமும் திரிஞ்சனான் சின்ன வெங்காயம் ஒருடமும் கிடக்கேல்ல..." தட்டுத் தடுமாறி ஒரு முட்டாள்த்தனமான பொய்யைச் சொன்னேன்.
"என்ன..., யாழ்ப்பாணத்துல சின்ன வெங்காயம் இல்லயோ...? என்ன விளயாடுறியளோ...?" கால்களுக்குள் மிதிவெடி டமால் டுமீல் என வெடித்தது.
"சரியப்பா... , இண்டைக்குப் பாக்கிறன். வாங்கிறன்"

******

விதானையானையும், அண்ணாவியனையும் மீண்டும் இன்று ஹஸீம் காக்காவின் கருவாட்டுக் கடையடியில் சந்திப்பதாக திட்டமிட்டுக் கொண்டபடி பஸ்ஸில் சென்று கடைக்கு முன்னால் இறங்கினேன். காக்காவின் கடையில் இருவரும் எனக்காகக் காத்துக் கொண்டு நின்றார்கள். எனது காஞ்சமூஞ்சி ஏதோ கலவரப் பட்டுப் போயிருக்கிறேன் என்று அவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது.

சின்ன வெங்காயம் மிஸ் பண்ணிய விசயத்தைச் சொன்னேன். இருவரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஹஸீம் காக்காவை சொல்லவே தேவையில்லை. நிலத்தில் விழுந்துகிடந்து உருண்டு உருண்டு சிரித்தார்.

"அறிவுச்சுரங்கமே அள்ளியொரு உம்மா தா" விதானையான் நக்கலடித்தான். விதானையான் விட்ட இடத்திலிருந்து அண்ணாவியன் தொடர்ந்தான்.
"அடே..... மச்சான் முந்தநாள் இங்க காக்காயிட்ட கருவாடு வாங்கினமெல்லோ.... கடையி வாசல்ல கும்பல் கும்பலா குவிச்சுக் கிடக்கிறத நீ காணவே இல்லயா மச்சான்." மூன்று நான்கு தராதரங்களில் திறந்து குவிந்தன மூடை மூடையாக சின்ன வெங்காயம்.

******

முதல்தர சின்ன வெங்காயம் என்று ஹஸீம் காக்கா மூன்று கிலோ பார்சல் பண்ணித் தந்தார். இப்போது புதிய பிரச்சனை..... இந்த சின்ன வெங்காயத்துக்காக அந்த 25கிலோவில் இனி எந்த மூன்று கிலோவைக் குறைப்பது.

"உரிக்க உரிக்க வெங்காயம் போல" கதையை நீட்டாமல்..... மூன்று கிலோ சின்ன வெங்காயம் நேர்வே கொண்டுவந்து சேர்த்துவிட்டேனாம்.

சின்ன வெங்காயத்திருவிழா ஆரம்பம். காலையில் பாணுக்கு முட்டைப் பொரியலில் தொடங்கி முருங்கையிலைச் சுண்டல் வரை, மாசிச் சம்பலில் தொடங்கி மாட்டிறைச்சிக் குழம்புவரை, எல்லாவற்றோடும் எக்ஸ்ரா பச்சை வெங்காயமுமாகவும்..... நாலைந்து நாட்கள் சின்ன வெங்காயக் காவடி களியாட்டம்தான்.

இஸ்ராயேல்மீது ஈரான் நடாத்திக் கொண்டிருக்கும் தாக்குதல்களை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கும்போது "கடல்த்தாமரை வத்தல் காய்ச்சுவம் வெங்காயம் உரியுங்கோ" என்று கிட்டத்தட்ட முக்கால் கிலோ வெங்காயத்தைக் கொண்டுவந்து என் முன்னால் வைத்தாள் மந்திரிகுமாரி. வெங்காயத்தை உரித்திக்கொண்டே ஈரானின் நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். முக்கால் கிலோ சின்ன வெங்காயம் முழுவதையும் உரித்து முடித்து விட்டேன்.

பின்னென்ன செய்வது.... சீனிச்சம்பல் தான். புட்டோடும், இடியப்பத்தோடும், தோசையோடும், பாணோடும், பழைய குத்தரிசிச் சோற்றோடும் என சீனிச் சம்பலும் ஒரு கரை கண்டு விட்டது.
சில நாட்களிலேயே சின்ன வெங்காயத்தைக் காணவில்லை. அதற்கிடையில் மூன்று கிலோ வெங்காயத்தையும் முழுங்கி விட்டோமா...? சாத்தியமே இல்லையே.... சந்தேகம் வலுத்தது.

அப்போதுதான் நினைவுக்கு வந்தது.... சின்னவெங்காயம் சிணுங்கி அழுதுவிடக் கூடாது என்பதற்காக நிலவறையில் நியூஸ் பேபப்பரை விரித்து ஒரு கிலோவுக்குமேல் பரத்திக் காய வைத்தது.

நிலவறைக்கு ஓடிச்சென்று நிலவரம் என்னவென்று பார்த்தால்.....
சின்னவெங்காயம்..... முளையும் தடலும் விடத் தொடங்கிவிட்டது. என்னதானிருந்தாலும் தமிழ் வெங்காயம் அல்லவா. எந்தப் பனிப் பிரதேசத்திலும் வேர்விட்டு வாழப் பழகிவிடும்.
வாழ்க சின்ன வெங்காயம் □

# ஈரான் - இஸ்ரேல் தாக்குதல்கள்



2025 யூன் 13ம் நாளன்று இஸ்ரேல், ஈரானிய அணுசக்தி நிலையங்கள், ஏவுகணைத் தொழிற்சாலைகள், இராணுவத் தளங்கள் மீதும் Tehran and Natanz போன்ற நகரங்களில் பணியாற்றிவரும் முக்கியமான தளபதிகளை குறிவைத்தும் மிகப்பெரிய அளவிலான வான்வழித் தாக்குதலை, அதாவது “Operation Rising” எனும் பெயரில் தாக்குதலை ஆரம்பித்தது.

இத்தாக்குக்குதலில் ஒரு புரட்சிகர காவல்படை தளபதி Hossein Salami மற்றும் மூத்த ஐ.ஆர்.ஜி.சி தலைவர்களும் கொல்லப்பட்டதாகச் செய்திகள் கூறப்படுகிறது. ஈரானிய அரசு ஊடகங்களும் அணு விஞ்ஞானிகளின் இறப்புகளை உறுதிப்படுத்தியுள்ளனர். Tehranஇல் வசிக்கும் பொதுமக்கள் பலரும் உயிரிழந்ததாக ஈரான் செய்திகள் தெரிவிக்கின்றன.

யூன் 13இல் நடந்த இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக ஈரான் 150க்கும் மேற்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஈரான் இஸ்ரேல் மீது வீசியுள்ளது. இவர்களது இலக்குகளாக இராணுவ மற்றும் உளவுத்துறை உட்கட்டமைப்புகள் அடங்கினாலும், தாக்குதல்கள் மூலம் பல பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கான ஈரானின் "Operation True Promise III” எனப் பெயரியிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் பரந்த அளவிலான பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் தாக்கங்களை அதிகரித்துள்ளது. உயிர் இழப்புகளுக்கு அப்பால் பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக எண்ணெய் விலைகளில் கூர்மையான உயர்வு, உலகளாவிய கப்பல் போக்குவரத்துகளில் இடையூறுகள், விமானப் போக்குவரத்து நிறுத்தங்கள், அதுமட்டுமல்லாது மத்திய கிழக்கு நாடுகளிடையே பெரும் பதட்டத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

இஸ்ரேலும் ஈரானும் எப்போதும் விரோதமாக இருந்ததில்லை.
ஈரானிய புரட்சிக்கு முன்பு, இரு நாடுகளும் நல்ல உறவைக் கொண்டிருந்தன. இஸ்ரேலும் ஈரானும் இராணுவரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நெருங்கிய நட்பு நாடுகளாகவே இருந்தன. பின்னர் பேச்சளவில் விரோதங்கள் வளர்ந்தன. 1991இல் வளைகுடாப் போர் முடிவடைந்ததிலிருந்து வெளிப்படையாக இரு நாடுகளுக்கும் இடையில் விரோதம் வளர்ந்தது.

ஈரானிய அணுசக்தி திட்டம், Hezbollah, Jihad, Hamas மற்றும் Houthis போன்ற இஸ்லாமிய குழுக்களுக்கு ஈரான் நிதியளித்து அவர்களை வளர்த்தல் போன்ற விடயங்கள் இஸ்ரேல் அரசுக்கு தாக்குத்தலுக்கு தூண்டியது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையால் மீண்டும் மீண்டும் போர்க்கட்டுப்பாட்டுக்கான அழைப்புகள் விடுக்கப்பட்ட போதும், எந்த நாடுகளும் செவிமடுக்காது தமது தாக்குதல்களை தொடர்ந்து வருகின்றனர். □




-மேகவண்ணன்-

Thug life பார்த்தேன்.
விமர்சனங்களில் கழுவி ஊற்றும் அளவுக்கு மோசமான படமில்லை. நல்ல தியேட்டர் அனுபவத்தை தரக்கூடிய ஒரு படம் தான்.
அண்மைக் காலங்களில் மிக மோசமான, செய் நேர்த்தி அற்ற பல குப்பைப் படங்களைப் பார்த்திருக்கிறேன்.
மணி ரத்னத்தின் பல படங்கள்...
பொன்னியின் செல்வன்-1,
பொன்னியின் செல்வன்-2 உட்பட.
ஆனால் THUG LIFE அந்த வகையிலான படமில்லை.
எடுத்துக்கொண்ட திரைக்கதைக்கு ஓரளவு நியாயம் செய்திருக்கிற படம் தான்.
BEAST, ஜெயிலர் போன்ற குப்பைகளை எல்லாம் வரவேற்றார்கள், இதை ஏன் கடுமையாக TARGET செய்து விமர்சிக்கிறார்கள் என்பது புரியவில்லை.

இந்தப்படத்தில் எனக்கு பிரச்சனையாக தெரிவது சில ஹாலிவுட் பட காட்சிகளை நினைவூட்டும் COPYCAT காட்சிகள், CASTING இல் நாசரும், ஜோஜு வும் படத்துக்கு பொருந்தாமல் இருப்பது போன்ற குறைகள்.
இன்னுமொருமுறை பார்த்தால் இன்னும் சில குறைகள் தெரியலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக நிராகரிக்க வேண்டிய படமும் இல்லை.

அதேபோல நம்மை ஒன்ற செய்து சிலிர்க்க வைக்க கூடிய தருணங்களும் படத்தில் இல்லை. அடுத்தடுத்த சம்பவங்கள், அதற்கான திரைக்கதையின் தொடர்சி, casting, technical making எல்லாமே இருக்கின்றன.
ரொம்ப நாளைக்கு பிறகு எரிச்சலூட்டாத ஒரு மணிரத்னம் படம்!




*காற்றிழந்த ககனவெளி.*
*கோயிற்கேணியடி ஆலமரக் கிளைகள்*
*எந்தவொரு அசுமாத்தமுமின்றி*
*ஆடாமல் அசையால் நின்றன.*

*ஆலங்கிளையில் தொங்கிய*
*ஒற்றை வானம்பாடி குருவிக்கூடு மட்டும்*
*மெல்ல மெல்ல அசைந்திருந்தது.*
*மூன்று நான்கு குஞ்சுகளாவது*
*கூட்டினுள் இருக்கக்கூடும்*

*அவை தமக்குள்*
*என்ன பேசிக்கொள்ளும்....*
*தாய் கொண்டுவரும் உணவைப் பற்றியா?*
*அல்லது*
*தமது கனவில் தோன்றிய*
*காட்சிகளைப் பற்றியதாக இருக்குமா...?*
*இல்லையேல்,*
*வானில் பறந்து வட்டமடித்து*
*பாடித் திரிந்து விளையாட*
*சிறகுகள் எப்போ முளைக்கும் என்றா?*
*அல்லது*
*இவை எல்லாமுமாக இருக்குமா...?*

*திடீரென வந்த வானம்பாடித் தாய்*
*கூட்டில் அமர்ந்துகொண்டாள்.*
*குஞ்சுகள் பறக்க ஆரம்பிக்க*
*காற்றில்லாத வானவெளியே தகுந்ததென*
*அவளுக்குத்தானே தெரியும்.*

*வானம்பாடிக் குஞ்சுகள்*
*வானில் பறத்தல் பயிற்சிக்காக*
*கூட்டைவிட்டு வெளியேறும் கணம்*
*அடுத்து வருவதாக இருக்கக்கூடும்.*

*காத்திருக்கப் பொறுதியற்றவனாய்*
*எழுந்து நடந்தான் கவிஞன்.*

*–தனஞ்சயன்–*




-ஜெனிரா சங்கர்-

ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியிலும் மொழி வளர்ச்சி மிகவும் முக்கியமானது. அவர்கள் தமது மொழித்திறனை வளர்த்துக் கொள்வதற்கு பெற்றோர் மற்றும் சூழவுள்ளோர் துணை புரிய வேண்டும். குழந்தைகள் நமது மொழியை உள்வாங்கி பேச வேண்டுமானால் நாம்அவர்களோடு நேரம் கொடுத்து அதற்காக உதவிட வேண்டும்.

**பெரியவர்கள் உதவக்கூடிய சில வழிகள் இங்கே.**

1. கேட்டு பதில் சொல்லுங்கள்.

குழந்தைகள் பேசும் போது பெரியவர்கள் உடனிருந்து பொறுமையாக கேட்க வேண்டும். மேலும் குழந்தை சொல்வதை, அவர்கள் கேட்டிருப்பதை, அவர்கள் வெளிப்படுத்தம் கருத்துக்களை, அவர்களுக்கு வழங்க வேண்டும். இதில் குழந்தை சொன்னதை மீண்டும் கூறுவது அல்லது சுருக்கமாகக் கூறுவது, குழந்தைகளுக்கு பதில் அளிப்பது ஆகியவை அடங்கும்.

2. குழந்தைகளுக்கு பேசுவதற்கு நேரம் கொடுங்கள்.

குழந்தைகள் தாமாக சிந்திக்கவும், தங்களை வெளிப்படுத்தவும் நேரம் கொடுக்க வேண்டும். குழந்தைகளின் வாக்கியங்களில் குறுக்கிடுவதையோ அல்லது அவர்களுக்காக பேசி முடிப்பதையோ தவிர்ப்பது முக்கியம். மாறாக காத்திருந்து குழந்தை தானாகவே வாக்கியங்களை பேசி முடிப்பதற்கு நேரம் கொடுங்கள்.

3. வளமான மொழியை பயன்படுத்துங்கள்.

பெரியவர்கள் குழந்தைகளிடம் பேசும் போது வளமான, தரமான மற்றும் மாறுபட்ட சொற்களை பயன்படுத்த வேண்டும். இதில் பல்வேறு சொற்கள், வாக்கியங்கள் மற்றும் வெளிப்பாடுகளை பயன்படுத்துவதும், தெளிவான மற்றும் தனித்துவமான முறையில் பேசுவதும் அடங்கும்.

4. வாசிப்பு

குழந்தைகளின் மொழி வளர்ச்சியை அதிகரிக்க வாசிப்பு ஒரு சிறந்த வழியாகும். பெரியவர்கள் குழந்தைகளுக்கு சத்தமாக வாசித்து காட்டலாம். மேலும் அவர் எதைப் புரிந்து கொள்கிறார் என்பதை சரிபார்க்க இடையில் கேள்விகளை கேட்கலாம்.

5. உரையாடலை ஊக்குவிக்கவும், குழந்தைகளை பேசவும் கேள்விகள் கேட்கவும் ஊக்குவிக்க வேண்டும்.

இதில் குழந்தையிடம் அவர்கள் ஏதாவது ஒன்றைப் பற்றி என்ன நினைக்கிறார்கள், உணர்கிறார்கள் என்று கேட்பது அல்லது குழந்தை தமது சிறு அனுபவம் மற்றும் நிகழ்வைப் பற்றி சொல்ல ஊக்குவிப்பவை ஆகியன அடங்கும்.

6. கருத்து தெரிவிக்கவும்

பெரியவர்கள் குழந்தைகள் பேசும் போது குழந்தைகளுக்கு நேர்மையான கருத்துக்களை வழங்க வேண்டும். இதில் சிறந்த வெளிப்பாடுகளை பாராட்டுவது அல்லது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குவது அடங்குகின்றன.

குழந்தைகளின் வாழ்க்கையில் சுறுசுறுப்பான பங்கேற்பாளர்களாக இருப்பதன் மூலம் குழந்தையின் வளர்ச்சிக்கு நேர்மையான முறையில் உடனிருந்து ஆதரவளிப்பதன் மூலமும் பெரியவர்கள், குழந்தைகளின் மொழி வளர்ச்சியை மேம்படுத்த உதவலாம்.




**Geetha Ravi**
ஒளிப்படக் கலைஞர் - நோர்வே

சூரியன் மறைந்த ஒரு இருள் பரவற்பொழுதில் விசுவமடுக்குளத்தருகே இந்தப் பறவையை ஜோடியாக முதல்முதலில் சந்தித்தேன். பட்ட மரக்கிளையில் ஏதோ இருப்பதாகத் தெரிந்தது. இருட்டில் அவ்வளவாகத் தெரியவில்லை. புகைப்படக் கருவியூடாகப் பார்த்த போது பிரமித்துப் போனேன். பெரிய பறவைகள் இரட்டைச் சொண்டுகள் இருப்பது போன்ற தோற்றம் செய்து வைத்த பொம்மைகள் போல இருந்தன. அவற்றின் கழுத்தசைவு ஒரு விதமாக வித்தியாசமாக இருந்தது. இது போல ஒற்றை அலகு இருக்கும் பறவையை முன்பு பார்த்திருக்கிறேன். அதுவும் அழகானது தான்.

யானைக்கான மின்சார வேலி இருந்ததால் கொஞ்சம் துணிவாக நிற்கக் கூடியதாக இருந்தாலும் மனதில் சின்னதாக ஒரு பயம் இருந்தது. கடந்து போகும் சில மனிதர்கள் அடிக்கடி எனக்குச் சொல்லும் வார்த்தை நேரத்துக்கு வீட்டுக்குப் போங்கோ என்பது தான். மிருகங்களுக்குப் பயம் என்பதை விட நிறைய கள்ளச்சாராயம், போதை வஸ்து அருந்தி அங்கே உலவும் மனிதர்களால் பயம் என்று தான் சொல்லிச் செல்வார்கள்...

முன்னைய காலங்களில் செல்லும்போது இருந்ததை விட ஒருவகை மனப்பயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் சூரியன் மறைந்து இருள் பரவ ஆரம்பிக்கும் முன்னான அந்தப் பொழுதில் அந்த இடம் ஒரு சொர்க்கலோகம்போல காட்சிதரும். பயமற்று நின்று இரசித்தால் இன்னும் இனிமையாக இருக்கும்.. அறிவுறுத்தல்களை மீறி நின்று இரசிப்பேன்.





பிறகு அங்கேயும் இங்கேயும் பார்த்துப் பார்த்து வீடு நோக்கி ஓடுவேன்.. இதற்கிடையில் தம்பியின் மகள் தொலைபேசி அழைப்பு விடுப்பாள் "மாமி எங்கே நிக்கிறீங்கள். உங்களுக்குக் கொஞ்சம் கூடித் தான் போச்சு" என்பாள்.
அதன் பின்னே அந்தப் பறவைகளுக்காகவே சில நாள் அலைந்தேன்.... படம் பிடிப்பதோடு அவற்றை ரசிப்பது மிக மிகப் பிடித்திருந்தது...
பறவையின் பெயர் "Malabar pied hornbill" தமிழில் "மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சி"
இந்த "மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சி" இந்தியாவிலும் இலங்கையிலும் இனப்பெருக்கம் செய்து வாழ்கிறது. இதன் வாழ்விடம் பசுமையான மற்றும் ஈரமான இலையுதிர் காடுகளாகும். □






# கொக்கு என்ன சொன்னது


கொக்கு ஒன்று தனது மூன்று குஞ்சுகளுக்கும் இரை தேடி அதிகாலையிலேயே கடலுக்குப் பறந்துவந்து ஒரு களங்கட்டி வலையின் மீது அமர்ந்து கொண்டது.



களங்கட்டிப் பட்டியில் பலவகை மீன்கள் அகப்பட்டிருந்தன. ஆனாலும் கொக்கு தனக்குத் தேவையான மீனைப் பிடிக்காமல் காத்திருந்தது.



தனக்கு மூன்று குஞ்சுகள் இருப்பதுபோல இந்தக் களங்கட்டி வலைக்குச் சொந்தமான மீனவருக்கும் குழந்தைகள் இருக்கலாம் அல்லவா? இதை நம்பி எதிர்பார்ப்புடன் மீனவர் வருவார். அவர் எடுத்துப்போனதை விட மீதமாக மீன்கள் இருந்தால் பிடித்துச் செல்லலாம் என்று காத்திருந்தது.
நீண்ட நேரம் காத்திருந்தது. கழுத்தை நீட்டி, தலையை உயர்த்திப் பார்த்தது.
மீனவர்கள் தூரத்தில் வருவது தெரிந்தது.





பொறுமையோடு காத்திருந்தது கொக்கு.



மீனவர்கள் பட்டியின் அருகில் வந்து அதற்குள் அகப்பட்டிருந்த மீன்களைப் பிடித்துக்கொண்டு திரும்பினார்கள்.



இப்போது கொக்கு களங்கண்டிப் பட்டியை உற்று நோக்கியது. மீனவர்கள் பிடித்துச் சென்றதுபோக சில முரல் மீன்கள் மீதமாக பட்டியில் இருந்தன.



கொக்கு மிகவும் லாவகமாக அதில் ஒன்றைக் கொத்திப் பிடித்தது. குஞ்சுகள் மூன்றுக்கும் இன்றைய காலை உணவுக்கு இது போதும் என கொக்கு தனது கூட்டுக்குப் பறந்து போனது.